# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.8/2023

### அ.சா. 12(LW 22 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | விஜயபாண்டியன் | **தொழில்** | |
| **த/க பெயர்** | | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **22.09.2025** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.
1 ,2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது செம்பட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.06.2022 அன்று அம்மையநாயக்கனூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது ராஜதானிக்கோட்டை வடக்கு தெருவை சேர்ந்த ராஜேந்திரன் மகன் பெருமாள் ராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 132/2022 இதச பிரிவுகள் 294(b), 324, 307 மற்றும் 302 ,இதசவாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை இதுதான். **அது அ.த.ச.ஆ.14. ஆகும்.** அதன் அசல் மற்றும் புகாரின் நகலை துரித முதல் தகவல் அறிக்கையாக கனம் நீதித்துறை நடுவர் நிலக்கோட்டை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் புகாரை பெற்று அதனை படித்து பார்த்த பின்புதான் முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன் என்றால் சரிதான். புகாரில் ஏதாவது திருத்தம் செய்யப்பட்டிருந்தால் அந்த திருத்தத்தின் படிதான் முதல்தகவல் அறிக்கை சரியாக தயாரிக்கப்படும் என்று சொன்னால் சரிதான். புகாரின் 3 வது பக்கத்தில் 4 வது வரியில் அரிவாள் என்ற வார்த்தை திருத்தம் செய்யப்பட்டுள்ளது , அது யாரால் திருத்தப்பட்டது என்றால்

புகார்தாரரே திருத்திதான் என்னிடம் அந்த புகாரை அளித்தார். அ.த.சா.ஆ.14. முதல் தகவல் அறிக்கை கணிணியின் மூலம் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கை என்னால் கணிணியில் தட்டச்சு செய்யப்படவில்லை என்றால் சரிதான். அதில் 3 வது பக்கத்தில் 5 வது வரியில் திருத்தம் செய்யப்பட்டு அரிவாள் என்ற வார்த்தையை மையினால் யார் எழுதியது என்றால் நான் சொல்லி அவ்வாறு மையினால் அரிவாள் என்ற வார்த்தை திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அரிவாள் என்ற வார்த்தைக்கு அடியில் முள்கம்பி என்ற வார்த்தை இருந்தது என்பதை என்னால் மறுக்க முடியுமா என்றால் அடித்து திருத்தம் செய்தது சரிதான். ஆனால் திருத்தம் செய்வதற்கு முன்பாக அந்த இடத்தில் என்ன வார்த்தை இருந்தது என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. காயம்பட்ட புகார்தாருக்கு நான் மெடிக்கல் மெமோ எதுவும் கொடுத்து அனுப்பவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் என்னிடம் புகார் கொடுத்த பின்பு மருத்துவமனை சென்றாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. புகார் கொடுத்த உடன் நான் அவரை மருத்துவமனைக்கு அனுப்பினேன். நான் மெடிக்கல் மெமோ கொடுக்கவில்லை. யார் கொடுத்தார்கள் என தெரியாது. நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்பு ஆய்வாளரை நான் எத்தனை மணிக்கு பார்த்தேன் என்றால் புகார் வந்த உடனேயே அவரை பார்த்தேன். காவல்நிலையத்தில் வைத்துதான் அவரை பார்த்தேன். நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் புகார்தாரர் என் முன்பாக நிலையம் ஆஜராகி புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை நான் தயார் செய்யவில்லை என்றாலும் புகார்தாரரிடம் கையெழுத்தை மட்டும் பெற்றுக் கொண்டு பின்னிட்டு புகார் உண்மைக்கு புறம்பாக உருவாக்கப்பட்டு அதன் அடிப்படையில் உண்மைக்கு புறம்பாக முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது பற்றி ஆய்வாளர் என்னிடம் விசாரித்தாரா என்றால் கேட்டார். முதல் தகவல் அறிக்கையில் 3 வது பக்கத்தில் ஏற்பட்ட திருத்தத்தை பற்றி நான் என்ன காரணத்திற்காக திருத்தம் செய்யப்பட்டது என்ற விவரத்தை ஆய்வாளரிடம் தெரிவித்தேன். நான் உண்மைக்கு புறம்பாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்திலிருந்து நிலக்கோட்டை நடுவரின் குடியிருப்பு எவ்வளவு தூரம் என்றால் சுமார் 12 கிமீ தூரம் இருக்கும். முதல் தகவல்அறிக்கையின் 15 வது காலத்தில் எத்தனை மணிக்கு யாரிடம் கொடுத்தனுப்பினேன் என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல முதல் தகவல் அறிக்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு கடவுச்சீட்டு மூலமாக கொடுத்தனுப்பினேன். அந்த கடவுச் சீட்டை பார்த்தால் தான் எத்தனை மணிக்கு கொடுத்து அனுப்பினேன் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து நிலக்கோட்டை நீதிபதியின் வீட்டிற்கு 1/2 மணிநேரத்தில் சென்று விடலாம். முதல் தகவல் அறிக்கை 20.06.2022 இரவு 11.30 மணிக்கு நீதித்துறை நடுவர் அவர்களால் பெறப்பட்டது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.22 19:42:40 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.